

# உணர்ச்சிகள்

சிறீரஞ்சனி

3.1

STEM-Kalvi Charity



**மகிழ்ச்சி**

தினமும் அம்மா எனக்கு ஒரு கதை சொல்வார். கதை கேட்பது எனக்கு மகிழ்ச்சியைத் தரும். அதற்காக நான் அம்மாவுக்கு நன்றி சொல்வேன்.





**கவலை**

பென்சில் தொலைந்து போனால் எனக்குக் கவலையாக இருக்கும். அம்மா என்னை அணைத்து என் கண்ணீரைத் துடைத்து விடுவார். அது என் கவலையைக் குறைந்துவிடும்.



# பொறாமை

சிலவேளைகளில், என் நண்பன் என்னுடன் விளையாடாமல் இன்னொருவருடன் விளையாடுவான். அதைப் பார்க்க எனக்குப் பொறாமையாக இருக்கும். பின்னர் அவன் என்னுடன் விளையாடும்போது என் பொறாமையைக் காணக்கிடைக்காது.



**கோபம்**

மணல் வீடு கட்டி விளையாடுவது எனக்குப் பிடிக்கும். அதைத் தம்பி குழப்பினால் எனக்குக் கோபம் வரும். அதைத் திரும்பவும் சரிசெய்வதற்கு அவன் உதவினால் என் கோபம் போய்விடும்.



**பயம்**

திடீரென மின்சாரம் தடைப்பட்டால் எனக்குப் பயமாக இருக்கும். உடனே, “நானிருக்கிறேன்’, என்றபடி அம்மா மெழுகுவர்த்தியுடன் வருவார். அப்போது எனக்குப் பயம் போய்ச் சிரிப்பு வரும்.



## ஆச்சரியம்

சிலவேளைகளில் என் பிறந்தநாளுக்கு நான் எதிர்பாராத அன்பளிப்புக் கிடைப்பதுண்டு. அப்படிக் கிடைக்கும்போது எனக்கது ஆச்சரியத்தைத் தரும். “நன்றி, நன்றி”, என மகிழ்ச்சியில் நான் கூவுவேன்.

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :** Sriranjani Vijenthira,
Toronto, Canada

**Book: Unarchchikal**
**(உணர்ச்சிகள்)**

**Language: Tamil**

**Reading Level**: 3.1

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022



**About the writer :** Sriranjani writes short stories, essays and reviews, and bilingual children's books. Her short story collections have won the Godage and State Literary awards in Sri Lanka. She also works as a Tamil teacher at the Toronto District School Board. Her bilingual children's books are used as teaching materials across the Toronto region. Sriranjani received her Bachelor of Science from the University of Peradeniya and Master of Arts in Tamil Language & Literature from Annamalai University.

| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics